# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.14190/F/2024**

திரு M. சதீஷ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றிய அலுவகம், வாலாஜாபாத் வட்டம், -- பொது அதிகார அமைப்பு
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 16.04.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.05.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 29.10.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு M. சதீஷ் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு B. அருணாச்சலம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றிய அலுவகம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், தென்னேரி ஊராட்சியில் மொத்தம் உள்ள மேல்நிலை தேக்க குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றிய விவரம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் தற்போது பயன்பாட்டில் உள்ளவை மற்றும் பயன்பாட்டில் இல்லாதவை பற்றிய விவரம், தென்னேரி

ஊராட்சியில் மொத்தம் உள்ள மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டியை கடந்த 01.04.2010 முதல் 31.10.2023 வரை எத்தனை நாட்கள் சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் மற்றும் சுத்தம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரம், தென்னேரி ஊராட்சியில் ஊதியம் பெறும் பணியாளர்களின் விவரம், தென்னேரி ஊராட்சியில் கடந்த 01.04.2010 முதல் 31.10.2023 வரையில் மேற்கொள்ளப்பட்ட சிவில் பணிகள், கட்டுமானங்கள், குழாய் இணைப்பு, தெரு விளக்கு அமைத்தல், சாலை அமைத்தல், பாலம் அமைத்தல், ஆழ்துளை கிணறுகள் அமைத்தல் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்கள் பற்றிய முழு விவரம், ஒவ்வொரு பணியும் செய்து முடித்த ஒப்பந்ததாரரின் முழு விவரம், பணிகள் முடிக்கப்பட்டதற்கான எம்.புக்கின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், தென்னேரி ஊராட்சியில் மொத்தம் உள்ள மேல்நிலை தேக்க குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது பற்றிய விவரம், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் தற்போது பயன்பாட்டில் உள்ளவை மற்றும் பயன்பாட்டில் இல்லாதவை பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்கடிள தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், இது குறித்து நாளதுவரையிலும் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகவும், அத்தகவல்களை பதிவுத்தபாலின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு,

மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.14190/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றிய அலுவகம்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605.

**<u>வழக்கு எண்.SA.14190/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு M. சதீஷ், த/பெ. மோகன்,
எண்.1, பலன்டி அம்மன் கோவில் தெரு,
பாலூர் கிராமம் & அஞ்சல்,
செங்கல்பட்டு வட்டம் & மாவட்டம் - 603 101.

Copy to: File
SNPS / 03.04.2025